★ இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 யாழ்ப்பாணம் | திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 10 வியாழக்கிழமை | இதழ்: 227 26-9-1991

(புதுடில்லி)
இந்தியப் படைகளுக்கு எதிராகப் போரிட விடுதலைப்புலிகளுக்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா ஆயுதம் வழங்கியதாகக் கூறி, இதற்கு இவர் மன்னிப்புக் கோர வேண்டுமெனப் புதுடில்லியில் இலங்கைத் தூதரகம் முன் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## எதிரணிக் கூட்டில் லடாய்?

(கொழும்பு)
அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு ஆதரவாக லலித், காமினி குழுவினர் வாக்களித்ததன் மூலம் எதிர்க்கட்சியினரின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.
(2ம் பக்கம் பார்க்க)

## அரசு சிறைகளில் 1054 புலிகள்?

(கொழும்பு)
ஆயிரத்து ஐம்பத்து நாலு விடுதலைப்புலிகளும் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஜே. வி பியினரும் தற்போது அரசின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவசர காலச்
(4-ம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு ஆயுத விநியோகம்

# அரசுக்கு எதிராக 4 கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஸ்ரீமாவோ சமர்ப்பித்தார்

(கொழும்பு)
ஆளும் ஐக்கியதேசியக்கட்சியின் ஜனாதிபதி-பிரதமருக்கு எதிராக 4எதிர்க் கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளன. நேற்று மாலை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட முன் இப்பிரேரணையை எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் சபாநாயகரிடம் ஒப்படைத்தனர்.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களும், தொடர்பு சாதனங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் வழங்கியதை கண்டித்தே 4 எதிர்கட்சிகளான ஸ்ரீலங்கா சு. கட்சி, லங்கா சமசமா ஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியவற்றின் பிரதிநிதிகள் திருமதி ஸ்ரீமாவோ தலைமையில் இப்பிரேரணையை சபாநாயகரிடம் நேற்று மாலை சபை ஒத்திவைக்க முன் சமர்ப்பித்தனர்.
(4ம் பக்கம் பார்க்க)

## சுயேட்சைக் குழு கொழும்பு வருகிறது?

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதியில் பெரும்பான்மைப்பலத்தைக் கொண்ட சுயேட்சைக்குழு அடுத்த சில தினங்களில் கொழும்பு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
எனினும் இச்செய்தி குறித்து மேற்படி சுயேட்சை வட்டாரங்களில் இருந்து இதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (சி)

## குற்றப் பிரேரணை சபைக்கு வருமா?

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குற்றப் பிரேரணை பாராளுமன்றில் விவாதத்துக்கு வருமா என்பது குறித்து அவதானிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.
(4ம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டம் ஒரு மாதம் நீடிப்பு

(கொழும்பு)
நாடாளுமன்றில் நேற்று அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான பிரேரணை 59 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.
இதில் அரசாங்கக் கட்சி-
(2-ம் பக்கம் பார்க்க)

## 3 இராணுவம் பலி 19 பேர் படுகாயம்

(கொழும்பு)
முல்லைத்தீவில் நேற்று இடம் பெற்ற மோதலில் 3 படையினர் கொல்லப்பட்டதுடன், 19 படையினர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(2-ம் பக்கம் பார்க்க)

அக்காச்சி நினைவாக

## எழுச்சி குடியிருப்பு இன்றுதிறப்புவிழா

(யாழ்ப்பாணம்)
"லெப். கேர்ணல் திலீபன் நான்காவது நினைவு நாளான இன்று 26ம் திகதி, ஓர் எழுச்சிக் கிராமம் ஒன்றைத் திறந்து வைத்து குடியிருப்பாளர்களிடம் வீடுகளைக் கையளிக்க வுள்ளோம்" வாதரவத்தையை
(4-ம் பக்கம் பார்க்க)

## முல்லையில் இறுதித்தாக்குதல் படைகள் தயாராகின்றன

(கொழும்பு)
முல்லைத்தீவு - மணலாறு பகுதியில் இடம் பெற்றுவரும் யுத்தத்தில் தமது இறுதித் தாக்குதலுக்கு படையினர் தயாராகிவருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.
விமானப்படை, கடற்படை உதவியுடன் தரைப்படையினர் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.
புதிதாக போரிடும் அணியாக பெருமளவு படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும்இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.
(சி)

## சபாநாயகர் இந்தியா பயணம்

(கொழும்பு)
சபாநாயகர் எம். எச். முகமத் நேற்று மாலை இந்தியா பயணமானார்.
இவர் அடுத்த மாதம் 8-ந் திகதி நாடு திரும்புவார் என தெரிவிக்கப்படுகிறது. (153)

## குற்றவிசாரணைப் பிரேரணை: சபாநாயகர் விரைவில் தீர்ப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பான முடிவைத் தாம் விரைவில் அறிவிக்கப்போவதாகச் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
மேற்படி குற்ற விசாரணைப் பிரேரணை ஒழுங்காக இருப்ப
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகள் எதிர்க்கட்சிகள் சந்திப்பு

(கொழும்பு)
கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் எதிர்க்கட்சிகளும், ஜனாதிபதியின் எதிரணியினரும் சந்தித்து பேசியுள்ளனர்.
எதிர்க்கட்சியை சேர்ந்த திரு. அநுரா பண்டாரநாயக்கா, திரு. மங்கள முனசிங்க, திரு. ராஜரட்ணம், திரு. சோமசரா தஸநாயக்கா
(4-ம் பக்கம் பார்க்க)

## 3 பத்திரிகைகளுக்கு எதிராக அரசு வழக்கு தாக்கல்

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிராக செய்திகளை வெளியிட்ட மூன்று அரசு சார்பற்ற பத்திரிகைகளுக்கு எதிராக அரசு வழக்கு தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது.
மேற்படி மூன்று பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எதிராக வழக்கு வெகுவிரைவில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்திய நிலையம்

வேலணையிலும் புளியங்கூடல் சந்தியிலும் இயங்கிய நடன முருகன் வைத்திய நிலையம் யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி, கொட்டடி றோட்டில் இயங்கி வருகின்றது. தொடர்பு; டாக்டர் கந்தையா நவரத்தினம்.
(சி-5391)

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சி- 5396)

### தேவை

நாறத்தங்காய்கள் தொகையாகத் தேவை கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். ''சக்தி தொழிலகம்'' 131, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(சி 5403)


## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
# அகதிகளுக்கு 96 வீடுகள் அமைத்துள்ளது

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பாத்திமா ஆலயத்திற்கு அண்மையில் உள்ள காணியில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் அகதிகளுக்காக 96 சிறிய வீடுகள் நிறுவப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாக பண்டத்தரிப்பு, பெரியவிளான் ஆகிய இடங்களிலுள்ள பொது இடங்களில் தங்கியிருந்த 96 அகதிகள் குடும்பங்கள் இந்த வீடுகளில் கடந்த வாரம் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இக்குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (72)

## கடவுச்சீட்டு படிவங்கள் தட்டுப்பாடு

[மானிப்பாய்]

யாழ் செயலக புத்தகசாலையில் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்து விட்டது.

## லலித் கோஷ்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சட்ட நீடிப்புக்கு எதிராக தாங்களும் வாக்களிப்பதாக முதலில் கூறிய ஐ.தே.க. எதிரணியினர் பின்பு இதற்கு ஆதரவாக வாக்களித்தன் காரணம் பற்றி எதுவும் தெரியவில்லையென பி.பி.ஸி: தெரிவித்தது.

இதேவேளை நேற்றுக் காலை பாராளுமன்றில் உரையாற்றிய திரு. லலித். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றங்கள் பற்றித் தங்கள் பிரசாரம் தொடரும் எனக் கூறினர் (சி)

## தியாகத்தீ - 12

இறுதிநாள் வந்தது...
எம்மொளி மறைந்தது...
உறுதியாய்க்
கொள்கையின்
முனைப்புடன் நின்றவன்..
சுருதி கலைந்தது...
சோகம் நிலைத்தது -
அவன்
மறைவிலே புரட்சி
இறுதி வெடித்தது!

- வாஞ்சிநாதன்.

# புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டிய இருவர் கைது

(சென்னை)

மதுரை மாவட்ட கம்பத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இருவரை பொலிசார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

மதுரை அவனியா புரத்தில் மற்றும் 2 இலங்கைத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழ் நாட்டில் தங்கி இருப்பதுபற்றி பொலிஸில் பதிவுசெய்துகொள்ளவில்லையென்று கூறப்படுகிறது.

# தமிழ் வியாபாரிகள் கொலை: இரு சிப்பாய்கள் தலைமறைவு; ஒருவர் கைது

வவுனியாப் பகுதியில் இருவியாபாரிகளை அண்மையில் சுட்டுக்கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் சிப்பாய் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா கூளாங்குளப் பகுதியில் குழந்தைவேலு [வயது 45], இராலிங்கம் [வயது-40] ஆகிய இருவியாபாரிகளை அவர்களின் வீடுகளில்வைத்து துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தில் வவுனியா இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாய்கள் மூவரை பொலிசார் கைதுசெய்ய முற்பட்ட போது இருவர் தலைமறைவாகி விட்டதாகவும் ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [வி]

## சவான் மீது கல் வீச்சு

(லண்டன்)

இந்தியாவின் உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான், காஷ்மீருக்கு நேற்று விஜயஞ் செய்தபோது அங்குள்ள அகதிகளின் கல்வீச்சுக்கு இலக்கானார். (வி)

## அவசரகால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

124, முஸ்லிம் காங்கிரஸ்-04, ரெலோ-01, ஈரோஸ்-02 ஆகியன பிரேரணைக்கு ஆதரவாகவும், 72 வாக்குகள் எதிராகவும் வாக்களிக்கப்பட்டன.

இதுவரை காலத்தில் இம்முறைதான் இவ்வளவு மேலதிக வாக்குகளால் இப்பிரேரணை நிறைவேறியதாக 'ரூபவாஹினி' தெரிவித்தது.
(153-க)

## மூன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் தொடர்ந்தும் உக்கிரமான மோதல் நடைபெற்றுவருவதாகவும், புலிகள் மிகக் கடுமையாக எதிர்த் தாக்குதலை மேற்கொள்வதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவுப் போரை விட, இது மிகப் பெரிய யுத்தமாய் அமைந்துள்ளதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (சி)


சாவகச்சேரி அருள்மிகு
## துர்க்காதேவி தேவஸ்தானம்
# மகா சண்டீஹோம அழைப்பு

அன்புடையீர்!

அன்னை ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் நாட்டின் சுபீட்சம் வேண்டியும், மக்களுக்கு இன்பப் பெருவாழ்வு கிட்டவும் கீழ்வரும் தினங்களில் மஹா சண்டீஹோம வேள்வி விழா நடைபெற அருட்பேறு கிட்டியுள்ளது.

30-09-91 திங்கட்கிழமை
காலை: கணபதிஹோமம்
நண்பகல்: நவக்கிரகஹோமம்
மாலை: துர்க்காஹோமம், யாகாரம்பம்

01-10-91 செவ்வாய்க்கிழமை
காலை, மாலை: சப்தஸதி பாராயணம் ஹோமம்

02-10-91 புதன்கிழமை
காலை: பாராயணம், சண்டீஹோமம், மகா பூர்ணாகுதி, விசேட அபிஷேகம்
மாலை: நவசக்தி அர்ச்சனை, உற்சவம்.

ஷெ தெய்வீகப் பெருவிழா நாட்களில் அனைத்து வடபகுதி மக்களும் இனமத பேதமின்றி வருகை தந்து அம்பிகையை வழிபட்டேத்தி அருட்பேறடையுமாறு தேவியனுக்கிரகத்தோடு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தேவியருள் கொண்டு
ப. மகாகணபதி சர்மா
[தர்மகர்த்தா]

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.
[சி 5388]



ஸ்ரீ ராம ஜெயம்
## திருமண நிறைவேற்று நிலையமும், சோதிட நிலையமும்

எங்களிடம் பலதரப்பட்ட ஆண்கள், பெண்களின் ஜாதகக்குறிப்புகள் உண்டு. உடன் திருமணத்திற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு:-

ஆஸ்பத்திரி வீதி,
மந்திகை, புலோலி.
(ஏ-1598)



# DHL தபால் சேவை மூலம்

அனுப்பப்படும் சகல தபால்களும்
பாதுகாப்பாகக் கிடைப்பதாக
பலரும் எழுதியுள்ளனர் ......

உங்கள் உறவினர்களின் வெளிநாட்டுத் தபால்கள்
உரிய நேரத்தில் கிடைக்க இன்றே எம்மிடம் ஒப்படையுங்கள்.

# DHL International

C/o Cosmos,
Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.
(ஏ 1547)



## யாழ். பல்கலைக்கழகம்
# யாழ் பல்கலைக்கழக ஆய்வு நூல்களின் விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளை பிரசுரங்களாக வெளியிடுவதுடன் அவற்றை விற்பனை செய்யவும் ஆரம்பித்துள்ளது இதன் முன்னோடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுநிலை விரிவுரையாளராக பணிபுரியும் திரு. எஸ். சிவலிங்கராஜா (M. A) அவர்களால் ஆய்வுசெய்து வெளியிடப்பட்டுள்ள ''வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்'' என்னும் நூல் யாழ். பல்கலைக்கழகத்தின் வரவேற்புப் பகுதியில் விற்பனைக்குள்ளது. பிரதியொன்றின் விலை ரூபா 30/- ஆகும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதனை தபால் கட்டளை/காசுக்கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும். தபால்மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சாதாரண தபால் செலவாக ரூபா 4/- மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தபால் கட்டளை/காசுக்கட்டளை நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

பின்வரும் ஆய்வுகள் அச்சில் உள்ளன.

1. பண்டைய தமிழகம்
   கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம்
2. நூலகவியலில் பட்டியலாக்கம்
   திருமதி வி. பாலசுந்தரம்
3. இறால் வளர்ப்பு (Shrimp Culture)
   கலாநிதி கே. சிற்றம்பலம்

- பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
[ஏ 1602]

# "கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு" முப்பது குடும்பங்களுக்கு புது வாழ்வு!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு."

என்ற குறளின் அடிப்படையில் தான "கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு" விடுதலைப்புலிகளால் பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி எழுச்சிக் குடியிருப்பை, இன்றிரவு 7மணிக்கு விடுதலைப்புலிகள் இயக்கப்பிரதித் தலைவர் திரு. மாத்தயா திறந்து வைக்கவுள்ளார்.

## கிராமத்து வரலாறு

புத்தூரிலுள்ள வாதரவத்தை என்னும் பகுதியில் இருந்து மூன்று மைல்கள் உள்ளே இருக்கும் "பொக்கணை" என்னும் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் தான் "கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு" அமைக்கப்பட்டுள்ளது

இந்த எழுச்சிக் குடியிருப்பைப் பத்திரிகையாளர்களுக்கு காண்பிப்பதற்காக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் வாகனத்தில் எம்மை அழைத்துச் சென்றார் விடுதலைப்புலிகள் எதற்காக இந்தக்கிராமத்தில் இக்குடியேற்றத் திட்டத்தை அமைத்துள்ளார்கள் என்ற விளக்கத்தை திரு. ராஜன் வாகனத்தில் செல்லும்போதே எமக்கு எடுத்துக் கூறிக்கொண்டு வந்தார்.

"பொக்கணை' கிராமத்து மக்கள் மிகவும் வறியவர்கள். கல்வியறிவு அற்றவர்கள். ஆண்டாண்டு காலமாக பணம் படைத்தவர்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களாவர். குடியிருப்பதற்குக் குடிசைகளை அமைக்க முடியாமல், ஆடு மாடுகளை அடைத்து வைக்கும் குடில்களைப்போன்ற மிகவும் பதிந்த கொட்டில்களில் வாழ்ந்து வந்தவர்கள். அன்றாடம் கூலிவேலை செய்வதற்காக பல மைல்கள் கரடுமுரடான பாதைகளைக் கடந்து சென்று வந்தவர்கள். குடிநீர் இன்றி மிகவும் கஷ்டப்பட்டவர்கள்.

இந்தச் சூழ்நிலையில் இக்கிராமத்து மக்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கையில் தான் இந்திய அமைதி காக்கும் படை இந்த மண்ணில் விடுதலைப்புலிகளை வேட்டையாட முற்பட்டது. அப்போது விடுதலைப்புலிகள் இயக்கத்து முக்கிய பிரமுகர்கள் பலர் இந்தக் கிராமத்தில்தான் தலைமறைவாக இருந்தார்கள்.

வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு வாழ்ந்துவந்த இக்கிராமத்து மக்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை தமது கண்ணிமைபோல் ஒன்றரை வருடமாகக் காத்து வந்தார்கள்.

இயக்க உறுப்பினருக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்தவர்கள் தான் இக்கிராமத்து மக்கள்" என்று திரு. ராஜன் கூறிமுடிக்கும்போது எமது வாகனம் அந்தக் குடியிருப்பின் முன்வாசலில் போய் நின்றது.

## 30 வீடுகள்

வடக்கு-தெற்கு இரு பக்கமாக 30 சிறிய வீடுகள் மிக அழகாகக் காட்சியளித்தன,

## 'தேவா'

சீமெந்தால் கட்டப்பட்டு "அஸ்பெஸ்ரஸ்" சீற்றால் வேயப்பட்டு முற்றுமுழுதாக முடிவடைந்த நிலையில் இந்த வீடுகள் இருந்தன. ஒவ்வொரு வீடும் $2\frac{1}{2}$ பரப்புக் காணிக்குள் கட்டப்பட்டிருந்தன;

இக்குடியிருப்புக் கிராமத்தில் பொது நூல்நிலையம், சிறுவர் பூங்கா, முதலுதவி நிலையம், பாலர் பாடசாலை, மக்கள் கடை என்பனவும் நவீனமுறைகளில் அமைக்கப்பட்டிருந்தன.

## குழாய்நீர்

வாதரவத்தை உமனேசன் வீதி சந்தியிலிருந்து பொக்கணை குடியேற்றத் திட்டம் வரை உள்ள மூன்று மைல்கள் தூரத்துக்கு. குழாய்|மூலமே நல்ல தண்ணீரை கொண்டு செல்வதற்காக நிலத்துக்கடியில் குழாய்களைப் பொருத்தும் வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை காணக்கூடியதாகவும் இருந்தது.

## வேலைத்திட்டங்கள்

இக்கிராமத்து மக்கள் அன்றாடம் கூலிவேலைகள் செய்கின்ற போதிலும் விவசாயத்திலும் ஈடுபட்டுவருகின்றார்கள்.

இவர்களுக்கென பல இடங்களை விடுதலைப்புலிகள் தோட்டங்கள் செய்வதற்கென வழங்கியுள்ளதால் பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து தோட்டத் தொழில்களையும் செய்துவருகின்றார்கள். இதற்குத் தேவையான விவசாய உபகரணங்களும் இவர்களுக்கு விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்டுள்ளன.

இவைதவிர பெண்களுக்கு தையல் மெசின்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் இப்பகுதியில் மாரிகாலத்தில் மிக அடர்த்தியாக வளரும் சம்புப் புல்லைக் கொண்டு பாய்கள் செய்வதற்கென தொழிற்கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுவருவதுடன் ஆடு, மாடுகள் வளர்ப்பதற்கும் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள பாலர் பாடசாலையில் 23 சிறுவர்களும். ஆரம்பகல்வியில் 87 மாணவர்களும் தற்போது கல்வி கற்றுவருகின்றார்கள். இரவு நேரத்தில் முதியோருக்கான கல்வியும் படிப்பிக்கப்பட்டுவருவதுடன் மாதர் சங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கும் பல சீர் ருத்த கொள்கைகளைத் தெரியப்படுத்துவதற்கெனவும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயம் ஒன்றும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது

## சாதனை

புத்தூர் சந்தியிலிருந்து பொக்கணை கிராம குடியேற்றத்திட்டம் வரையுள்ள எட்டு கிலோ மீற்றர் தூரம்வரை புதிய தார் றோட்டு மின்னல் வேகத்தில் அமைக்கப்பட்டதுடன் கடந்த ஆறு மாத காலத்துக்குள் துரிதகெதியில் இந்த மாபெரும் குடியேற்றத் திட்டத்தை விடுதலைப்புலிகள் முற்றுப்பெறச் செய்திருப்பது ஒரு சாதனை என்றே கூற வேண்டும். (வி)

---

## தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

(காங்கேசன்துறை)

சுன்னாகத்தில் திலீபனின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்ட போது வீதி நெடுகிலும் பூரண கும்பங்கள் வைத்து மலர் மாலை அணிந்து அஞ்சலி செய்யப்பட்டது

இணுவிலிலும் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திலீபனின் படம் வைக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

### உண்ணாவிரதம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் மருதனாமடம் வைரவர் ஆலயம், இணுவில் பிள்ளையார் கோவில் உட்பட பல்வேறு ஆலயங்களிலும் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெற்றன.

மூலைமுடுக்குகளில் எல்லாம் அஞ்சலிக்கூட்டங்கள் இடம் பெறுகின்றன. (86)

(யாழ்ப்பாணம்)

தியாகிதிலீபனின்4ம் ஆண்டு நினைவு விழாவும் "தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை" அங்குரார்ப்பண நிகழ்ச்சியும் இன்று காலை 9 மணியளவில் தொழிநுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதையடுத்து சிறப்புரைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(வண்டத்தரிப்பு)

தியாகி திலீபனின் 4-ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு சில்லாலை வடக்கு சிற்றூரவையினரால் கடந்த புதன்கிழமையன்று நடாத்தப்பட்ட முழுநாள் உண்ணாவிரதத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (72)

### பொதுஅறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 4ம் ஆண்டு நினைவு விழாவை ஒட்டி மக்கள் நலன்புரிக்கழக யாழ். பிரிவினரால் பொது அறிவுப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான பரீட்சைகள் இன்று 26ம் திகதி வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று கல்லூரிகளில் நடைபெறும்.

---

## "இந்திய இலங்கை கூட்டுச்சதியை அம்பலப்படுத்தவே திலீபன் உண்ணாவிரதமிருந்தார்" - மாலினி

(யாழ்ப்பாணம்)

"தமிழகத்தில்விடுதலைப்புலிகளுக்கு பெரும் செல்வாக்கு இருக்கிறது. கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அங்கு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக கூட்டங்கள் பல இன்றும் நடைபெறுகின்றன"

இவ்வாறு நல்லூரில் நேற்று முன்தினம் நடைபெற்றதியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டத்தில விடுதலைப்புலிகளின் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி மாலினி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தமிழீழ மண்ணுக்காக, தாய்மொழிக்காக நடக்கும் தியாக வரலாற்றுச் சம்பவங்கள் கடல் கடந்து நிற்கும் எமது மக்களிடம் ஏற்படுத்திய இன உணர்வுகள் இந்தக்குருதிசிந்திய மண்ணில் எத்தகைய எழுச்சியை ஏற்படுத்தியுள்ளன என்பதைச் சிந்திக்கவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் இன்று அரசியல்நெருக்கடி ஏற்பட்டுள்ளன. இந்த வேளையிலகூட ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. எமது மண்ணை, வடக்கு கிழக்குக்கான எமது தாயகத்தை துண்டாடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். ஸ்ரீலங்காவில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவர்களது அடக்குமுறை அகலப்போவதில்லை.

இன்று மக்கள் எமது போராளிகளின் தியாகத்தை புரிந்து கொள்கிறார்கள், ஆகவே எங்களோடு அந்நியப்படுத்தி நிற்காமல் இணைந்து செயல்பட முன்வரவேண்டும்.

போராட்டம் பல திருப்புமுனையைக்கொண்டது. தமிழர்களுக்கு விடுதலை பெற்றுத் தருவோம், பாதுகாப்பளிப்போம் என்று கூறி மிகப்பெரிய ஆக்கிரமிப்பை நடத்திய இந்திய அரசினதும்,ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும் கூட்டுச்சதியை அம்பலப்படுத்துவதற்காகவே தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்தார்.

காந்தீயப்போர்வையில் ஜனநாயகத்தை அமைப்போம் என்று கூறிக்கொள்ளும்இந்திய அரசின் நாடகத்தை தியாகி திலீபன் தோலுரித்துக்காட்டினார்.

அவரது இலட்சியங்களை, உயர்ந்த எண்ணங்களை நிறைவேற்ற வீட்டுக்கு ஒரு வீரரை போர்க்களத்துக்கு அனுப்ப வேண்டும்,

ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற, மண்ணை மீட்க போராடுவது தவிர்க்கமுடியாதது. அதனால் நாங்கள் ஒவ்வொருவரினதும் கரங்களில் ஆயுதம் ஏந்தவேண்டும். இறைமை, சுதந்திரம், தாயகத்தை மீட்பதற்காக ஒவ்வொருவரும் போர்க்கலத்தில் பணிபுரிய வேண்டும்" என்றார். [52]

---

## இராசி பலன்

26-09-1991

வியாழக்கிழமை

தமிழுக்குபுரட்டாதி 10

திருதியை பி. இ. 2-48வரை அச்சுவினி மு.இ: 11-36வரை; அமிர்தசித்தயோகம் இராகு காலம் பகல் 1.32 முதல 3-02 வரை, சுபநேரம் காலை 7-32 முதல் 9 02 வரை

மேடம்; வஸ்திரலாபம், போஜனசுகம் பந்து வரவு.

இடபம்; சத்துருபீடை, காரியவிக்கினம்தொழில்முடக்கம்.

மிதுனம்: ஸ்திரிலாபம் செல்வாக்கு, புதியபதவி.

கடகம்: புத்திரர் மகிழ்ச்சி பயணம், குடும்பசுகம்,

சிங்கம்: பலவீதுன்பம், குடும்பபிரிவு, கைப்பொருள் இழப்பு

கன்னி: தொழில் கலகம், பணநஷ்டம். சுகவீனம்.

துலாம்: பணலாபம் மரியாதை காரியசித்தி.

விருச்சிகம்: மனமகிழ்ச்சி, தொழில் லாபம், குடும்பசுகம்

தனுசு: பித்தமயக்கம் வீண்பகை அடிபணிதல்.

மகரம்: தனக்குறைவு, குடும்பவிரோதம், மனச்சுமை.

கும்பம்! குதூகலம் வெற்றி வாய்ப்பு, பொதுப்பணி

மீனம்: தாழ்ந்தநிலை தோல்வி முயற்சிகள் தாமதம்.

ஜோஸ்யர்

---

## மாணிக்க இடைக்காடர் காலமானார்

(கொழும்பு)

மாணிக்க இடைக்காடர் நேற்று முன் தினம் கொழும்பில் காலமானார்.

இவர் முன்னாள் சிவில்சேவை உத்தியோகத்தராவார். ஐக்கிய நாடுகள் புனர்விசாரணை நடவடிக்கைகளுக்கும் இவர் ஆலோசகராக பணியாற்றியுள்ளார்.

பல கட்டுரைகளையும் நூல்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

மறைந்த பேராசிரியர் க. கைலாசபதியின் மாமனரான அமரர் மாணிக்க இடைக்காடரின் மரணச்சடங்குகள் இன்று வியாழன் மாலை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## மணலாறு மோதலில் 16 புலிகள் களப்பலி

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் 22ம் திகதி நடைபெற்ற மோதலில் 10 வேங்கைகள் களப்பலியாகினர்.

டானி (சின்னத்துரை வசந்தகுமார், உடுத்துறை)

சங்கீதா (வசந்தகுமாரி நடராசா, நவாலி)

திபாகர் (மாணிக்கம் மகேஸ்வரன், துறைநீலாவணை)

விநோத் (இராசையா யுவராசா, வத்திராயன்)

சனத் (செபஸ்தியாம்பிள்ளை ஜெயசீலன், முள்ளியான்)

தர்மிலா (மாலா மயில்வாகனம், ஆழியவளை)

சுமங்கலி (மல்லிகா விஜயரட்ணம், இயக்கச்சி)

ரஜினி (குயின்பத்மா தியாகராசா, இராசாவின் தோட்டம்)

ரூபவதி (வசந்தி மகாலிங்கம் விநாயகபுரம், முழங்காவில்)

நியூட்டன் (சோமசேகரம் இராஜயோகம், ஓமந்தை.

23ம் திகதி மோதலில்:

விவேக் (மார்க்கண்டு மகேந்திரன், கரவெட்டி)

ரூபி (செல்வராணி தம்பையா, வரணி)

மனோச் (ரத்தினம் சிவகுமாரி ஓமந்தை)

ரஜிந்தன் (ஆறுமுகம் செல்வரட்ணம், முல்லைத்தீவு.

24ம் திகதி மோதலில்:

யசி (சியாமலாதேவி ஆனந்தம், தொண்டமனாறு)

குமரன் (தில்லைநர் உதயகுமரன், வவுனிக்குளம்) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளார்கள். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

---

## வெற்றி தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கழக ஏ கோஷ்டியினருக்கும், நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழக 'ஏ' கோஷ்டியினருக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி எத்தரப்பினரும் கோல்கள் போடாத நிலையில் ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

நாவாந்துறையில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு பி. ஆர். தம்பிநாயகம் மத்தியஸ்தம் வகித்தார். (வி)

★ தமிழக பாதுகாப்பு பற்றிய

# ஜெயலலிதாவின் கோரிக்கை

# மத்திய அரசால் புறக்கணிப்பு

(சென்னை)

தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கையை முறியடிக்க தாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு உதவுமாறு மத்திய அரசிடம் விடுத்த கோரிக்கைகளை அது புறக்கணிப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கவலை தெரிவித்துள்ளார்.

புலிகளின் பிரச்னை இரு நாட்டு பிரச்னை அல்ல இது ஒரு சர்வதேசப்பிரச்னை அவர்களை தமிழகத்திலிருந்து வெளியேற்ற தமது அரசு தொடர்ந்து முயலுமென்றும் அவர் 'இந்து' பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார்.

தமது கோரிக்கைகளை மத்திய அரசு உதாசீனம் செய்வதாகவும் தமக்கு மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (சி)

## 3 பத்திரிகைகளுக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசு புலிகளுக்கு விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை வழங்கியதான செய்திகளை மேற்படி பத்திரிகைகள் வெளியிட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை எடுக்க அரசு முனைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## பாராளுமன்றில்

# அனுரா சீற்றம்

[கொழும்பு]

இலங்கை அரசுக்கு சொந்தமான 'டெயிலி நியூஸ்' பத்திரிகை ஆசிரியர் திரு. மெனிக் டி சில்வா "பார் ஈஸ்டன் எக்னமிக் ரிவியூ பத்திரிகையில் இலங்கை எதிர்கட்சிகளையும் நாடாளுமன்றத்தையும் பற்றி தரக்குறைவாக எழுதியுள்ளார் என்றும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எம். பி. அனுரா பண்டாரநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார். மேலும் 'சண்டே ஒப்சேவர்' ஆசிரியர் ஜிரிவிரி மகிந்தபால மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை சபாநாயகர் எம் எச். முகமதுவும் இந்த பத்திரிகை ஆசிரியர்களை கண்டித்துள்ளார். [153]

## குற்றப் பிரேரணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுவரை மேற்படி பிரேரணை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலிலோ ஒழுங்குப் புத்தகத்திலோ சபாநாயகர் பதிவு எதனையும் மேற்கொள்ளாததையடுத்தும் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையில் இடப்பட்டுள்ள கையெழுத்து குறித்தும் எழுந்த சர்ச்சைகளையும டுத்தே மேற்படி கேள்வியை அவதானிகள் எழுப்பியுள்ளனர்.

தொடர்ந்தும் அரசியல் யாப்பு குறித்து சர்ச்சைகள் இடம்பெற்று வருகின்றனவாம். [சி]

# 'கிழக்கில் மீண்டும்

# புலிகள் அச்சுறுத்தல்

(மட்டக்களப்பு)

கிழக்கில் விடுதலைப் புலிகள் மீண்டும் அரச படையினருக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில வாரங்களில் 5 அதிகாரிகள் உட்பட 40க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப் பட்டதுடன் 30படையினர் வரை காயமடைந்துள்ளனர்.

தற்போது கிழக்கிலிருந்து பெருமளவு படையினர் மணலாறு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் புலிகளின் பலத்த அச்சுறுத்தல் கிழக்கில் இருக்குமெனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# சுவிஸ் அகதிகள்

# அனுப்பப்படமாட்டார்கள்

(ஜெனீவா)

இலங்கையில் அமைதி ஏற்பட்டு சுமுகமான நிலை ஏற்படும்வரை சுவிஸிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள்திருப்பி அனுப்பப்படமாட்டார்களென சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது.

சுவிஸ் அரசின் மேற்படி நிலைப்பாட்டை அந்நாட்டு அகதிகள் புனர்வாழ்வு அலுவலக நிர்வாக இயக்குநர் திரு. பீற்றர் ஆர் பென்ஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது ஜெனீவாவில் நடைபெறும் ஐ நா. சபையின் 'மனித உரிமை' சம்பந்தமான மாநாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. [சி]

## தமிழ்க்கட்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் கடந்த திங்கட்கிழமை தமிழ் கட்சிகளை சந்தித்து பேசினர்.

இதேவேளை கடந்தவார முற்பகுதியில் திரு லலித், திரு. காமினி திரு. பிரேமச்சந்திரா தமிழ்க் கட்சிகளை சந்தித்து பேசியுள்ளனர். [சி]

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு சந்திரசேகர் தலைமையிலான 'சமாஜவாதி ஜனதா கட்சி' இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும்பாலானோர் இலங்கைத் தூதரகம் முன்னால் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகக் கோஷமிட்டதுடன். புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதற்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதையடுத்து தூதரகத்திற்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம்மா நடராசா

இருபாலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா நடராசா சிவபதமடைந்துவிட்டார். அன்னார் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலையின் ஒய்வுபெற்ற அதிபரும், சமாதானநீதவானுமாகிய திரு. ம. க. நடராசாவின் பிரியபத்தினியும், தியாகராசா (ஜேர்மனி), இரத்தினராணி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், இராசேஸ்வரி (ஜேர்மனி), தியாகராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், இராசையா (ஒய்வுபெற்ற ஓவசியர்), அமரர் செல்வரத்தினம் (ஓய்வுபெற்றபொலிஸ் சார்ஜன்ட்), அமரர் சிவபாக்கியம், இரத்தினமலர் ஆகியோரின் உடன் பிறப்பும், தர்சிகா, யோகராசா, தர்சனன். தணேசன், நிசாந்தி, சேந்தன், நிவேதா, ஜெகராசா, மயூரன், டினாணி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இருபாலை கிழக்கிலுள்ள 'மலர் அகம்' இல்லத்தில் 25-9-1991 புதன்கிழமை நடைபெற்று இருபாலைமயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ம. க. நடராசா

(எ-1604)

## அரசு சிறைகளில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டம் நீக்கப்படுமாயின் இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இவர்கள் விடுதலை செய்யப்பட்டால் நாட்டு நிலைமை என்னவாகும் என்பது பற்றி எதிர்க்கட்சியினர் உணர்ந்து கொள்ள வேண்டும்"

பிரதமர் டி. பி. விஜயதுங்கா நாடாளுமன்றில் அவசரகால நீடிப்பு பிரேரணையை முடித்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வட-கிழக்கு பிரச்னையை முடிவுக்கு கொண்டுவருவதில் சகலரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்றும் ஐக்கிய இலங்கை என்ற ஒருமைப்பாட்டை பேண சகலரும்பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். [சி]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Lanka under Licence Number B/10336/81

# தியாகி திலீபன் நினைவு

# இறுதி நாள் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 4ம் ஆண்டு நினைவு இறுதிநாள் நிகழ்ச்சிகளும் உண்ணா நோன்பும் நினைவுக் கூட்டமும் இன்று நல்லூர் வீதியில் நடைபெறவுள்ளது.

திரு விஞேதன் [அரசியல் பொறுப்பாளர் யாழ். மாவட்டம்] தீபமேற்ற, தேசியக் கொடியை திரு. தமிழ்ச்செல்வன் (தளபதி யாழ். மாவட்டம்) ஏற்றுவார். காலை 8.00 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமாகும். திலீபன் தியாக மரணமடைந்த நேரமான 10. 48 மணிக்கு அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி திலீபனின் உருவப்படத்திற்கு மலர் சாத்துதலை தொடர்ந்து உண்ணாவிரதம் நடைபெற்று மாலை 4-மணிக்கு நிறைவுறும்

இதனைத் தொடர்ந்து நினைவுக்கூட்டம் மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும். தலைமையுரை திரு மாறன் (யாழ்.மாவட்ட அ/நி/பொறுப்பாளர்), செல்வி ஜெயா [வி. பு. மகளிர் முன்னணி பொறுப்பாளர் தமிழீழம்] திரு. தமிழ்ச்செல்வன் [தளபதி யாழ்.மாவட்டம்] திரு அன்ரன் பாலசிங்கம் [அரசியல் ஆலோசகர் வி. புலிகள்] திரு.பரா [பொறுப்பாளர் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு தமிழீழம்] திரு வே பாலகுமார் [வி பு. முக்கிய பிரமுகர்] சிறப்புப் பேச்சாளர் திரு. கோ மகேந்திரராசா [தலைவர், வி பு. மக்கள் முன்னணி] இறுதி நிகழ்ச்சியாக போர்க்கால எழுச்சிபாடல்கள் [சாந்தன் குழுவினர்] நாடகமும் நடைபெறும்.

## அன்னதானம்

[யாழ்ப்பாணம்]

தியாகி திலீபனின் நினைவாக அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி இன்று 42,மணிக்கூட்டு வீதியில் அவரின் நினைவாக அமைக்கப்பட்ட லெப் கேணல் தியாகி திலீபன் நூலகத்தில் ஏழை மக்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

# ஜனாதிபதிக்கு ஆதரவான

# மனுவிலும் மோசடி

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து 116 எம். பிக்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் கையளித்த மனுவில் மோசடி நடைபெற்றுள்ளதாக ஜனாதிபதியின் அணியிலிருந்து விலகிய பொலநறுவை மாவட்ட எம். பி திரு முத்துபண்டா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்ட எம். பிக்களின் பட்டியலில் தான் கையெழுத்திடவில்லை என்றும் ஆனால் தமது பெயர் எழுதப்பட்டு அதில் யாரோ கையெழுத்திட்டுள்ளதாகவும் திரு முத்து பண்டா தெரிவித்துள்ளார்.

தங்களைப் பற்றி பத்திரிகைகளில் வரும் பல செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் திரு. லலித் திரு. பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளனர். (சி)

# ஐ. நா. தலைமையகத்தில்

# இலங்கைப் பிரச்னை

(நியூயோர்க்)

ஐ. நா. சபை தலைமையகத்தில பல நாட்டு வெளியுறவு அமைச்சர்களையும் சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சர் சோலங்கி சர்வதேச விவகாரப் பட்டியலில் இலங்கைப் பிரச்னை பற்றியும் கலந்தாலோசித்துள்ளார்.

ஐ. நா. சபையில் நடைபெறும் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டின் பின் நடைபெற்ற சந்திப்பின் போது இது பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## அக்காச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அண்டியுள்ள பொக்கணை என்ற பகுதியிலேயே இந்த எழுச்சிக் கிராமம் அமைந்துள்ளது".

தமிழீழ விடுதலைப் புலிகள் எழுச்சிக் கிராமம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

30 வீடுகளைக் கொண்ட இந்த எழுச்சிக் கிராமத்திற்கு கப்டன் அக்காச்சியின் நினைவாக சிறிகாந்தன் எழுச்சிக் கிராமம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தமிழீழ மக்கள் ஒரே இனத்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் சமூக ஒடுக்குமுறை, பொருளாதாரப் புறக்கணிப்புக் காரணமாக எமது ஒரு பகுதியினர் முன்னேறமுடியாதபடி தடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் சமூக-வாழ்வு நிலை உயர்த்தப்பட்டு, தமிழீழத்தின் ஏனைய மக்களுடன் சமூக வாழ்வில் சரிசமமான நிலைக்கு உயர்த்தப்படவேண்டும் என்ற நோக்குடன் சில அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

அத்தகைய திட்டங்களில் ஒன்றுதான் 'சிறிகாந்தன் எழுச்சிக் கிராமப் பணி''யாகும் என்பதை எமது மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

இதேபோன்று வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ் குடாநாட்டின் மற்றைய சில பகுதிகளிலும் இவ்வேலைத் திட்டங்களைச் செயற்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும் மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

## புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் ராஜீவ் கொலை தொடர்பாகப் பிடிபட்ட புலிகளிடம் இருந்து இலங்கை அரசு கொடுத்த ஆயுதங்களும், தொடர்புச் சாதனங்களும் கைப்பற்றப்பட்டதாகவும், புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதை இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதர் ஒப்புக்கொண்டதாகவும் இப்பிரேரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் அடுத்த மாதம் 8ம் திகதி கூடும்போது இதுபற்றி விவாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## குற்ற விசாரணை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தால் தாம் திருப்தியடைந்து அதை ஏற்றுக்கொள்வதாகவும், எனினும் பிரேரணையில் காணப்பட்ட கையொப்பங்களின் பெறுமதி குறித்துக் கேள்வி எழுப்பி, தமக்கு முறைப்பாடு கிடைத்திருப்பதால் தாம் இது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

குற்ற விசாரணைப் பிரேரணை சம்பந்தமான தீர்ப்பையும் தாம் ஒத்திவைப்பதாகச் சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.